TNMD160002062023

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.86/2023

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபி | Father/Husband Name | : பொன்னுச்சாமி |
| Calling | : | Age | : |
| Date | : 13.08.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of 08.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது கம்மாபட்டியில் குடியிருந்து எலெக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்னால் புலிப்பட்டிக்கு வேலைக்கு சென்றுவிட்டு எனது இருசக்கர வாகனத்தில் இரவு 6-7 மணியளவில் கருப்பு கோவில் அருகே ஒரு பாலம் இருந்தது. அதனருகே ஒரு கம்மாய் இருந்தது. அங்கு வந்து கொண்டிருந்தபோது பின்னர் பெயர், விலாசம் தெரிந்து கொண்ட விஜயகுமார் என்பவர் லிப்ட் கேட்டபதுபோல் அங்கு நின்று எனது வண்டியை மறித்தார். நான் வண்டியை நிறுத்தியதும் அவர் எனது இருசக்கர வாகனத்தின் சாவியை எடுத்துகொண்டார். அவர் கத்தியை எடுத்து எனது வைத்தில் வைத்து பாக்கெட்டில் என்ன வைத்திருக்கிறாய் என்று கேட்டு வைத்திருந்த எனது கைப்பேசியையும் ரூ.7 ஆயிரம் பணத்தையும் எடுத்து கொண்டார். அவர் என்னிடம் இருசக்கர வாகன சாவியை கொடுத்து ஓடுடா என்று சொன்னார். நான் அங்கிருந்து எங்கள் ஊருக்கு

சென்று நடந்த சம்பவத்தை சொன்னேன். அதன் பின்னர் நானும், எனது அண்ணன் சுரேசும் மேலவளவு காவல்நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்தை சொல்லி புகார் கொடுத்தோம். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் மனு என்னுடையதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள். இவ்வழக்கின் எதிரி விஜயகுமாரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். அவர் எங்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர்தான்.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**